Edit with WPS Office

அலகு : 5

நன்னூல்- சொல்லதிகாரம்- உரியியல்.

பாடக்குறியீடு:16LCCLT4.

1.உரிச்சொல்லின் இலக்கணம்: ஒரு குணத்தை உணர்த்தும் பல சொல்லாக வரும். பல குணத்தை உணர்த்தும் ஒரு சொல்லாக வரும். பெயர், வினைகளை விட்டு நீங்காமல் நிற்கும். 2.பண்பின் இலக்கணம்: உயிர் உடையது. உயிர் அல்லாதது என இரு வகையில் அடங்கும் உலகத்துப் பொருள்களின் குணங்களே பண்பாகும். 3.உயிர்ப்பொருள்கள்: உடம்பு, நாக்கு, மூக்கு, கண், செவி ஆகிய ஐந்து பொருள்களினால் ஐந்து புலன்களை அறிய முடியும். 4.ஓரறிவு உயிர்: புல், மரம் - உடம்பால் தொடும் உணர்வு. 5.ஈரறிவு உயிர்: சிப்பி, சங்கு - நா, சுவை ஆகிய இரண்டால் அறியும் அறிவு. 6.மூவறிவு உயிர்: சிதல், எறும்பு - நா, சுவை, மூக்கு ஆகிய மூன்றால் அறியும் அறிவு. 7.நாலறிவு உயிர்: தும்பி, வண்டு - நா, சுவை, மூக்கு, கண் ஆகிய நான்கால் அறியும் அறிவு. 8.ஐந்தறிவு உயிர்: தேவர், மக்கள், நரகர்,விலங்கு, பறவை ஆகிய அனைத்தும் நான்கு அறிவுடன்+செவியால் ஓசையை அறியும் அறிவு. 9.உயிர்ப்பொருள்களின் குணப்பண்புகள்: (32) அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி,மையமல், நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாண், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவி ஆகியவை உயிர்க்குணங்கள் ஆகும். 10.உயிர்ப்பொருளின் தொழிற்பண்புகள்:(5) துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல், உய்த்தல்-ஆகிய ஐந்தும் உயிரின் தொழில் பண்புகள் ஆகும். 11.உயிரல்லாத பொருள்களின் குணப்பண்புகள்: பல்வகை வடிவம், இருவகை நாற்றம், ஐந்து வண்ணங்கள், ஆறு சுவைகள், எட்டு வகைத் தொடு உணர்வுகள் ஆகியவை ஆகும். 12.ஒரு குணம் தழுவிய உரிச்சொல்: சால,உறு, தவ, நனி, கூர்மையான, கழி. எ.கா: உறு பசி 13.பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்: கடி என்னும் உரிச்சொல்- காப்பு, கூர்மை, விரைவில், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல்,கரிப்பு. எ. கா: கடி நகர், கடி வேல், கடி மாலை.